28.10.2025.

சி.சி.121/2022

**அ.சா.2, தட்சணாமூர்த்தி, த/பெ.மாணிக்கம் மனுவின்பேரில் குறுக்கு விசாரணை.**

எனது பேத்தியின் பெயர் மதுமித்ரா ஆகும். அவர் எங்கு பிறந்தார் என்றால் சென்னை ஆவடியில் பிறந்தார். முதல் பிரசவம் என்பதால் மருத்துவம் நாங்கள் பார்த்தோமா என்றால் நாங்கள்தான் பார்த்தோம். தனியார் மருத்துவமனையில் பிரசவம் நடந்தது. மேற்படி தனியார் மருத்துவமனையில் பிரசவம் பார்த்ததற்கான மருத்துவமனை பில்கள் என்னிடம் இல்லை 1ம் எதிரியிடம் உள்ளது. பிரசவத்திற்கு எவ்வளவு செலவு ஆனது என்றால் ரூ.50,000/-ம் இருக்கும். எனது முதல் விசாரணையில் எனது மகளுக்கு பிரசவம் முடிந்தவுடன் எனது வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம் என்றால் சரிதான் மேலும் எங்கள் வீட்டிற்கும் வந்து எதிரி எனது மகளை அடித்தார் என்றால் சரிதான். அது சம்மந்தமாக எந்தவொரு புகாரும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அடித்ததாக சொல்லும் சம்பவம் நடந்து எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 4 ஆண்டுகள் இருக்கும். அதனால் 1ம் எதிரியின்மீது நான் கோபமாக இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கையில் எனது பெயரும் எனது மனைவி பெயரும், எனது மகன் பெயரும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேலும் எனது மருமகனின் சகோதரி மற்றும் அவரது கணவரின் பெயரும் போடப்பட்டுள்ளது. மேற்படி பத்திரிக்கையில் குழந்தையின் தாத்தா, பாட்டி என்ற இடத்தில் தட்சணாமூர்த்தி, வசந்தி என்று போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் கோபமாக இருந்தபோது ஏன் பேரக்குழந்தையின் பிறந்தநாள் விழாவிற்கு சென்றேன் என்றால் அப்போது கோபம் இல்லை. சிவகுமார் என்பவர் எனது மகளின் முதல் கணவர் ஆவார். எனது மகளுக்கும் முதல் கணவர் சிவகுமாருக்கும் விவாகரத்து பெற்றுவிட்டோமா என்றால் விவாகரத்து ஆகிவிட்டது. விவாகரத்திற்கு பிறகு எவ்வளவு நாட்களுக்கு பிறகு 1ம் எதிரிக்கு திருமணம் நடந்தது என்று சொன்னால் சுமார் ஒரு வாரம் இருக்கும். திருமணத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் சுமார் 4 நாட்களுக்கு முன்னர் நிச்சயதார்த்தம் நடைபெற்றபோது 1ம் எதிரிக்கு எனது மகளுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றது தெரியாது என்றால் தெரியும். எனது மகளின் முதல் கணவருக்கு எதிரான விவாகரத்து வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான்.

எனது மகளின் முதல் கணவருக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு அதன் பேரில் அவரிடமிருந்து சீர்வரிசை பொருட்களை பெற்றோம் என்றால் புகார் கொடுக்கவில்லை ஊர் பஞ்சாயத்துமூலம்தான் பொருட்களை பெற்றுக்கொண்டோம். எனது மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துதான் பொருட்களை பெற்றுக்கொண்டோம் என்று சொல்லியிருந்தால் அதைபற்றி எனக்கு தெரியாது. எனது மகள் முதல் கணவரிடம் எத்தனை நாட்கள் வாழ்ந்தார் என்றால் 6 மாதங்கள் கூட வாழவில்லை. எனது மகளுக்கு 1ம் எதிரியுடன் திருமணம் ஆன பிறகு நானும், எனது மனைவியும் எனது மகளுடன் சென்னையில் வசித்து வந்தோம் என்று

சொன்னால் இல்லை. 1ம் எதிரி தனது தாய் தந்தையுடன் வசிக்கக்கூடாது என்று நானும், எனது மனைவியும் கூறியதால்தான் பேரக்குழந்தையின் முதல் பிறந்தநாள் விழா பத்திரிக்கையில் எங்களது பெயரை குழந்தையின் தாத்தா பாட்டி என்ற இடத்தில் போடப்பட்டுள்ளது என்றாலும், மேலும் எங்களது கட்டாயத்தின்பேரில்தான் எனது மகன் ரகுவீரபாண்டியன் பெயரும் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மகள் தாக்கல் செய்த இவ்வழக்கில் சாட்சிகளாக என்னையும் எனது மனைவி மற்றும் எனது மகனை சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 ஊராட்சி மன்ற தலைவர், பட்டியல் சாட்சி 6 எங்கள் வார்டு கவுன்சிலர் என்றால் சரிதான் வேறு தனிநபர் சாட்சி இல்லையென்றால் சரிதான். எனக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் சொத்துக்கள் இடையாது. 1ம் எதிரிக்கு சென்னையில் 2 வீடுகள் உள்ளது என்றால் சரிதான் 3வது வீடும் உள்ளது. நான் சொல்வதுபோல் எனக்கு எந்தவித வசதியும் இல்லாதபோது 1ம் எதிரிக்கு வரதட்சணை கொடுத்தேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது மகள் 1ம் எதிரியுடன் சென்னையில் வாழ்ந்த கால கட்டத்தில் அவருக்கு எதிராக புகார் ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை.

1ம் எதிரி எனது மகளையும் அவரது குழந்தையையும் வீட்டைவிட்டு எந்த தேதியில் வெளியே தள்ளினார் என்று குறிப்பாக கூற முடியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை. அது தொடர்பாகவும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகளுக்கு எதிராக 1ம் எதிரி விவாகரத்து வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. பூந்தமல்லி நீதிமன்றத்திற்கு எனது மகள் சென்றாரா என்றால் சென்றார் நானும் உடன் சென்றேன். அங்கு வழக்கறிஞரை வைத்து நடத்தினோம். அது என்ன வழக்கு என்றால் சமரச மனுவாகும். 1ம் எதிரி எனது மகளுக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அதற்கு எதிராக இந்த வழக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் சாலை மறியல் செய்துதான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான் வழக்கு பதிவு செய்யாததால் சாலை மறியல் செய்தோம். நாங்கள் சாலை மறியல் செய்த விவரம் பேப்பரில் வந்தது என்றால் சரிதான். அதன் பின்னிட்டுதான் போலிசார் இவ்வழக்கினை பதிவு செய்தார் என்றால் சரிதான். போலிசாரை எனது மகள் வாழ்ந்த இடமான சென்னை ஆவடிக்கு அழைத்துச்சென்று காட்டினோமா என்றால் இல்லை.

மேற்படி புகாருக்கு பிறகு நானும் எனது மகளும் 1ம் எதிரி வீட்டிற்கு சென்று சீர்வரிசை பொருட்கள் மற்றும் நகைகளை எடுத்துக்கொண்டு வந்துவிட்டோம் என்றால் பாதி நகைகளை கொடுக்கவில்லை. நான் எனது மகளுக்காக என்ன என்ன நகைகள் சீர்வரிசையாக செய்தோம் என்ற பட்டியலை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் கொடுக்கவில்லை. 1ம் எதிரி பாதி நகைகள் மற்றும் பாதி பொருட்களை கொடுக்கவில்லை என்பதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். எனக்கும் என் மகளுக்கும் புகார் கொடுப்பதுதான் வாடிக்கை என்றாலும் சரியல்ல. எனது மகள் முதல் கணவருடன் வாழும்போது வேறொரு நபருடன் தொடர்பு இருந்ததால்தான் இருவருக்கும் விவாகரத்து ஆனது என்றால் சரியல்ல. இருவருக்கும் மனம் ஒத்துபோகாததால் சேர்ந்து வாழவில்லை. திருமணம் நடந்து 6 மாதத்திலேயே மனம் ஒத்து போகவில்லை என்றால் சரிதான். எனது மகள் எப்போதும் வேலை பார்க்காமல் செல்போன் பார்த்துக்கொண்டே இருந்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டு எனது வீட்டிற்று வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகள்தான் 1ம் எதிரியுடன் சேர்ந்து

வாழவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி 3-வது திருமணம் செய்துகொண்டதற்கான ஆதாரத்தை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை. எதிரிகள் மற்றும் அவரது குடும்பத்தார்கள் எனது மகளிடம் வரதட்சணை கேட்கவில்லை என்றாலும் 1ம் எதிரி 3-வது திருமணம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளிடம் பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மகள் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் தட்டச்சு செய்யப்பட்டதாகும். வழக்கறிஞர்தான் தட்டச்சு செய்தா் புகாரை நாங்கள்தான் சொன்னோம். எதிரிகள் இவ்வழக்கில் குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல.